


# வரவிருக்கும் நெருக்கடி

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி. 14:7,9,12; வெளி 4:11; வெளி. 13:1,2; வெளி. 12:3–5,17; வெளி. 13:11–18.

**மனன வசனம்:** உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17.

மைக்ரோ சிப் என்பது ஒரு அரிசியின் அளவே உள்ள, உடலுக்குள் பொருத்தக்கூடிய புதிய மருத்துவ சாதனம். அதை நோயாளியின் உடலுக்குள் பொருத்தலாம். அந்த நோயாளியின் மருத்துவ வரலாறு அதில் இருக்கும்; அந்த சிப் பொருத்தப்பட்டுள்ள பகுதிக்கு மேலாக ஒளிவருடல் செய்தால், அவரது மருத்துவ வரலாற்றைத் தெரிந்துவிடலாம். இது மிருகத்தின் முத்திரையைப் புகுத்துவதற்கான ஒரு வழியென சில கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள். உணவு பொட்டலங்களின் மேலுள்ள பார் குறியீட்டில் அந்த முத்திரை இடம்பெறுமென்று சிலர் சொல்கிறார்கள்; பணத்தாள்களில் ஒரு இரகசிய எண்ணை அச்சிட்டு, அதைக் கூட்டினால் 666 வரும்படி இருக்குமென்று வேறு சிலர் கூறுகிறார்கள். சகோதர அமைப்பு, இலுமினாட்டி அமைப்பு, பிளாக்ஹெலிகாப்டர், ஐநா போன்ற அமைப்புகள்மூலம் வரலாமென்று சிலர் நம்புகிறார்கள்.

தொழுகைசம்பந்தமாக வரப்போகிற நெருக்கடி குறித்து பாடத்தில் பார்ப்போம். தேவனுடைய பிரமாணத்தைக் குறைத்துக்காட்டி, அவரது அதிகாரத்திற்கு சாத்தான் சவால் விடுவான். குறிப்பாக, உலகம்முழுவதிலும் தொழுகை சம்பந்தமான நெருக்கடிக்கு ஓய்வுநாள் ஆசரிப்பு முக்கியக் காரணமாக இருக்கும். சாத்தான் நம் சிருஷ்டிகரை வெறுப்பதால் ஓய்வுநாளை வெறுக்கிறான். வற்புறுத்தல், அழுத்தம், வலுக்கட்டாயம் ஆகியவற்றால் கிறிஸ்துமேலுள்ள நம் அர்ப்பணிப்பைக் குலைக்க முயலுவான். தொழுகைக்கான உண்மையான நாள், பொய்யான நாளுக்கிடையே கொள்கைப் போராட்டங்கள் இருக்கும். உபத்திரவம், பொருளாதார நெருக்கடி, சிறைத்தண்டனை, மரணதண்டனை போன்றவற்றிற்கு மத்தியில் கிறிஸ்துவுக்கு உண்மையோடு இருக்கும்படி தேவன் வேண்டுகிறார். பூமியின் இறுதி நெருக்கடியில் நம்மை மீட்க, இயேசு பெலமுள்ளவர்.

***மாபெரும் போராட்டம், 35,36ஆம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஜூன் 15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# வெளிப்படுத்தல் சொல்கிற இறுதி நெருக்கடி

வெளிப்படுத்தல் என்றால் அடையாளங்களும், விநோதமான மிருகங்களும், புரியாத உருவகங்களும் உள்ள புத்தகம் அல்ல; அதில் மேலான செய்தி உள்ளது. அன்புள்ள தேவன் கடைசிக்கால தலைமுறையினருக்குக் கொடுத்துள்ள நித்திய சத்தியங்கள் உள்ளன. கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற போராட்டம் தொழுகையின் அடிப்படையில் பரலோகத்தில் உருவானது. அதன் அடிப்படையிலேயே அது உச்சக்கட்டத்தை அடையவும் போகிறது.

**இந்தப் போராட்டத்தில் தெளிவாகத் தெரிகிற முக்கிய விஷயம் என்ன? வெளி 14:7,9; 4:11.**

வெளிப்படுத்தல்முழுவதிலும்தொழுகையும்சிருஷ்டிப்பும்பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. சகலத்தையும் சிருஷ்டித்த கர்த்தரைத் தொழுமாறு வெளி 14:7 அழைக்கிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், உலகத்தில் அதிக பரபரப்பை ஏற்படுத்தி வருகிற பரிணாமக் கொள்கையின் அடிப்படையில், ஓய்வுநாள் நம் அடையாளத்திற்கான நிரந்தரச் சின்னமாக இருக்கிறது. நாம் சிருஷ்டிக்கப்பட்டவர்கள், நம் சிருஷ்டிகரே நம் மெய்ப்பற்றுக்கும் தொழுகைக்கும் பாத்திரர் என்பதை அது தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பிசாசானவன் ஓய்வுநாளை அதிகம் வெறுப்பதற்கு இது ஒரு காரணமாக இருக்கிறது.

**சிருஷ்டிகரைத் தொழுதுகொள்வதே எவ்வாறு நியாயமான செயல்; ஏன்? வெளி 12:17; 14:12.**

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதன் மூலம் சிருஷ்டிகரைத் தொழுவது, மிருகத்தைத் தொழுவதற்கு நேரெதிரான செயல். கடைசிக் காலத்தில், வரலாற்றில் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய எதிர்ப்பும், உபத்திரவமும் வந்தாலும், தேவன்மேல் மெய்ப்பற்றுள்ள ஒரு கூட்டத்தார் இருப்பார்கள்.

‘அரசாங்கத்தின் சட்டப்படி நான்காம் பிரமாணத்திற்கு விரோதமாக பொய்யான ஓய்வுநாளை ஆசரிப்பது தேவனுக்கு எதிரான வல்லமைமீது மெய்ப்பற்று வைப்பதற்கானஉறுதிமொழியாகஇருப்பதுபோல,தேவனுடையகட்டளைக்குக் கீழ்ப்படிந்து மெய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவது, சிருஷ்டிகர்மீது மெய்ப்பற்று வைப்பதற்கான ஓர் ஆதாரமாக இருக்கும்’

இரட்சர்கர்மீது அர்ப்பணிப்புள்ள இந்த விசுவாசிகள் ‘இயேசுவின் விசுவாசத்தை’ காத்துக்கொள்பவர்களென வெளி 14:12 கூறுகிறது. இயேசுவின் விசுவாசம் என்பது ஆழமானது; கண்களால் காண முடியாவிட்டாலும் நம்புகிற ஒரு விசுவாசம்; புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் நிலைத்திருப்பது. அது இயேசுவிடமிருந்து கிடைக்கிற ஒரு வரம்; அதை விசுவாசத்தால் பெறுகிறோம்; வரப்போகிற நெருக்கடியில் நாம் வெற்றிபெற அது உதவுகிறது.

---

**தேவனே சிருஷ்டிகர் என்பதற்கு ஒரு அடையாளமாக ஏழாம் நாள் ஓய்வுநாள் இருக்கிறது; சிருஷ்டிப்பில் அதை தெளிவாகக் காணலாம். எனவே, ரோம் செய்ததுபோல அந்நாளை மாற்றமுயலுகிற செயலானது (தானி 7:25), சிருஷ்டிகர் என்கிற முறையில் தேவனுக்குள்ள அதிகாரத்தை மறுக்க முயலுவதாகும். கடைசி நாட்களில் இதுவே சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கப்போவதைப் புரிந்துகொள்ள இந்த உண்மை எவ்வாறு உதவுகிறது?**

# வரவிருக்கிற நெருக்கடி

வெளி 13இல் உள்ள மிருகத்தின் முத்திரை குறித்த தீர்க்கதரிசனம், தேவனுக்கு எதிரான சாத்தானின் யுத்தம் ஒரு கொடிய கட்டத்தை எட்டுவதுபற்றிச் சொல்கிறது. இயேசு சிலுவையில் மரித்தபிறகு, தான் தோற்கடிக்கப்பட்டதை எதிரி அறிந்திருக்கிறான்; அதனால் தன்னால் முடிந்த அளவுக்கு அதிகமானபேரை நரகத்திற்குள் இழுத்துச்செல்லத் தீர்மானித்திருக்கிறான். இந்த முயற்சியில் அவனது முதல் வியூகம் வஞ்சகம். வஞ்சகம் வேலைசெய்யாதபோது, அவன் நிர்பந்தத்தை கையில் எடுக்கிறான். மிருகத்தை வணங்காத அல்லது அதன் முத்திரையைப் பெறாத எவரும் கொல்லப்படுவார் என்கிற கட்டளைக்கு பின்னால் அவன்தான் இருக்கிறான்.

பக்திசம்பந்தமாக உபத்திரவம் எழுவது புதிதல்ல. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததற்காக ஆபேலை காயீன் கொன்றதுமுதலே அது இருந்து வருகிறது. விசுவாசிகள்மத்தியில் எப்போதும் அப்படிப்பட்ட நிலை காணப்படும் என்று இயேசு சொன்னார்.

**புதிய ஏற்பாட்டுச் சபையின் அனுபவம் என்ன? அது கடைசிக்காலச் சபைக்கு எவ்வாறு பொருந்துகிறது? யோவான் 16:2; மத் 10:22; 2தீமோ 3:12; 1பேதுரு 4:12.**

கிறிஸ்தவ வரலாறு முழுவதும் உபத்திரவம் இருந்திருக்கிறது. அஞ்ஞான ரோமில் நடந்தது. வேதாகமத்தை நம்பின கிறிஸ்தவர்களை மத்தியக்காலத் திருச்சபை உபத்திரவப்படுத்தியது. இந்த நரகச் சங்கிலியில் மிருகத்தின் முத்திரைதான் இறுதி வளையமாக இருக்கும். முந்தின உபத்திரவங்களைப் போலவே, சில தவறான நம்பிக்கைகளையும், அங்கீகரிக்கப்பட்ட தொழுகை முறையையும் எல்லாரும் ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுவார்கள்.

அந்த உபத்திரவம் முதலில் பொருளாதாரத் தடைகளாக ஆரம்பிக்கும். அந்த முத்திரையைப் பெறாத எவரும் வாங்கவோ விற்கவோ முடியாது. மரண தண்டனை என அறிவிக்கப்படும். வெளி 13:15,17.

கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்பவர்களை இறுதிச் சோதனை வரும்போது, தங்கள் வாழ்க்கையில் சமரசங்களைச் செய்து மிருகத்தின் முத்திரையைப் பெறும்படி செய்ய சாத்தான் ஆயத்த வேலைகளைச் செய்து வருகிறான். உலகம் முழுவதுமே ஆச்சரியத்தோடு மிருகத்தைப் பின்பற்றுவதாகத் தோன்றும்போது (வெளி 13:3), அங்கே திடீரென காட்சி மாறுகிறது; தேவ மக்களைப்பற்றி தீர்க்கதரிசனம் சொல்கிறது. வெளி 14:12 சித்திரிக்கிற காட்சி இது: 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்'. தேவமக்கள் தேவபக்திக்கேற்ற கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ்கிறார்கள். அவரது கிருபையால், தங்களைச் சுற்றிலும் எல்லாம் அசைவதாகத் தெரியும்போது, உறுதியாக நிற்கிறார்கள். உலகம் மிருகத்தைப் பின்பற்றும்போது, 'ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்(களாகக்)' காணப்படுவார்கள். வெளி 14:4. தங்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்கிற நரகத்தின் வல்லமைகளை ஜெயிப்பார்கள்.

நன்மைக்கும் தீமைக்கும் இடையே தொழுகை சம்பந்தமாக போராட்டம் நடக்கிறது. மிருகம் வஞ்சகத்தைப் பயன்படுத்துகிறது; அது தோற்கும்போது, வற்புறுத்தலையும் கட்டாயத்தையும் பயன்படுத்தும்.

---

**ஓய்வுநாளை ஆசரிப்பதில் சமரசம்செய்ய பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் தலையிட எவ்வளவு தூரம் அனுமதிக்கிறீர்கள்?**

# மிருகத்தை அடையாளம் காணுதல்: பகுதி 1

**இந்த மிருகம் எங்கிருந்து எழும்புகிறது? அதற்கு அதிகாரத்தைக் கொடுப்பது யார்? வெளி 13:1,2.**

வலுசர்ப்பம் என்பது சாத்தான் என வெளிப்படுத்தல் காட்டுகிறது. வெளி 12:3-5 சொல்கிறபடி, 'பிள்ளை' பிறந்த உடனேயே அதை அழிக்க வலுசர்ப்பம் முயலுகிறது; பிறகு அந்தப் பிள்ளை 'தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காச னத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது'. அஞ்ஞான ரோம் மூலமாகக் கிரியைசெய்கிற பிசாசுதான், கிறிஸ்துவை அழிக்கமுயன்றது. மத் 2:16-18. தேவனுடைய பிரதான சத்துருவும் மனிதனும் சேர்ந்து, சாத்தானின் நோக்கங்களை நிறைவேற்ற அரசியல்-மத நிறுவனங்கள்மூலம் செயல்படுகிறார்கள்.

இந்த மிருகத்தின வல்லமைபற்றி 'வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது'. வெளி 13:2. இந்தத் தீர்க்கதரிசனம் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப்பிறகு துல்லியமாக நிறைவேறியது; அப்போது, ரோமப் பேரரசரான கான்ஸ்டன்டைன் தன் தலைநகரை ரோமிலிருந்து இன்றைய துருக்கியிலுள்ள கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றினான். அதனால் ரோமப்பேரரசின் முந்தைய தலைநகரத்தில் இராயர்களின் இருக்கை காலியானது; அதை மிருகம் பெற்றது. இவ்வாறு அஞ்ஞான ரோம் தன் இருக்கையை, அதாவது தலைநகரத்தை மிருகத்திற்குக் கொடுத்தது.

ஐசக் பக்கஸ் என்பவர் இவ்வாறு சொல்கிறார்: 'சிங்காசனத்தை கான்ஸ்டன்டிநோபிளுக்கு மாற்றியதன்மூலம் ரோமின் பேரரயர் பூமியிலுள்ள எல்லா மனிதர்களுக்கு மேலாகவும், பரலோகத்தின் தேவனுக்குமேலாகவும் தன்னை உயர்த்த கான்ஸ்டன்டைன் வழிவகுத்தான்'. தாமஸ் ஹாப்ஸ் என்பவர் இவ்வாறு சொல்கிறார்: 'போப்புமார்க்கமானது, மடிந்துபோன ரோம சாம்ராஜ்யத்தின் ஆவியே அல்லாமல் வேறு எதுவுமல்ல, அது முந்தையதின் கல்லறைமேல் கிரீடம்சூட்டி உட்கார்ந்தது'. கவனமாக ஆராய்ந்தால், வெளி 13இன் கடல் மிருகம் ரோமிலிருந்து எழுந்து, உலகளாவிய தொழுகை முறையாக மாறிய தேவதுரோக மார்க்க வல்லமை என்பது தெளிவாகத் தெரிகிறது. வெளி 13:3,4. மிருகம் என்பது ஒரு நபரல்ல; அது தேவ வார்த்தைக்குப் பதிலாக மனித கட்டளைகளைப் புகுத்தின ஒரு மார்க்க அமைப்பு.

**மிருக வல்லமையை அடையாளங்காட்டுவதற்கு வெளி 13:1,6இல் என்ன முக்கிய வார்த்தை பயன்பட்டுள்ளது?**

தூஷணம் என்றால் என்னவென்று யோவான் 10:33 உம் லூக் 5:21 விவரிக்கின்றன: 1) ஒரு மனிதன் தன்னை தேவனாகப் பாவிப்பது. 2) ஒரு மனிதன் தனக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருப்பதாக உரிமைபாராட்டுவது. இவ்வாறு செய்வது அநீதி; ஏனென்றால், இயேசுவே மெய்யான தேவன்; அவருக்கே பாவங்களை மன்னிக்க உரிமையுண்டு. தேவதூஷணம் என்று வேதாகமம் அழைக்கிற இரண்டு கோட்பாடுகள் போப்புமார்க்கத்திடம் உள்ளன: தன் பாதிரியார்களுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரமுண்டென உரிமை பாராட்டியதும், தேவனுடைய தனியுரிமைகளை பூமியில் போப் பெற்றிருப்பதாகச் சொன்னதும் ஆகும்.

# மிருகத்தை அடையாளம் காணுதல்: பகுதி 2

மிருகத்தைத் தொழாமல், தேவனைத் தொழுவதில் தேவமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள். இருதயத்திலுள்ள அன்பு கீழ்ப்படிதலாக வெளிப்படுகிறது. அவர் தங்கள்மேல் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்புள்ளவராக இருந்தாரென்பதை அறிந்து, அவர்மேல் அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள்.

**வெளி 13:5இல், என்ன ஒரு அம்சத்தை காண முடிகிறது?**

தீர்க்கதரிசன காலக்கட்டத்தைப் புரிந்துகொள்ள தேவன் ஒரு முக்கியத் தடயத்தைக் கொடுத்திருக்கிறார். (4ம் பாடம்). அதாவது, ஒரு தீர்க்கதரிசன நாள் வழக்கமான ஒரு வருடத்திற்குச் சமம். எண் 14:34; எசே 4:6. வெளி 13:5இல் சொல்லப்படும் 42 மாதங்கள் என்பது, ஒரு எபிரெய மாதத்திற்கு 30 நாட்கள் என்பதின் அடிப்படையில், 1260 தீர்க்கதரிசன நாட்கள் அல்லது வழக்கமான 1260 வருடங்கள் ஆகும்.

கி.பி. 538 முதல் கி.பி. 1798 வரை போப்புமார்க்கம் ஆதிக்கம் செலுத்தியது. பிரெஞ்சுத் தளபதியான பெர்தியர், கி.பி. 1798இல் போப்புவைச் சிறைப்பிடித்த போது, போப்பு மேலாதிக்க காலம் முடிந்தது; வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது:'சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன்சிறைப்பட்டுப்போவான்'. வெளி13:10. போப்புமார்க்கத்திற்கு விழுந்த அடி பயங்கரமாக இருந்தபோதிலும், அது சாகவில்லை. சாவுக்கேதுவான அந்தக் காயம் குணமாகவிருந்தது. வெளி 13:12. போப்புமார்க்கத்தின் ஆதிக்கம் மீண்டும் உலகம்முழுவதிலும் உணரப்படும்.

இன்று, உலகத்தலைவர்கள் போப்புவை ரோமச் சபையின் தூதுவரென வரவேற்கிறார்கள்; வாடிகனுக்குச் சென்று அவரைச் சந்திப்பதை வழக்கமாக வைத்துள்ளாரகள். எப்போது என்ன நடக்குமென தெரியாத இந்த உலகத்தில், மக்களை ஒன்றிணைக்க திறமையுள்ள ஒழுக்கத்தலைவராக போப்புவை உலகம் ஏற்றுக்கொள்வதற்கான எல்லா சாத்தியங்களும் உள்ளன. 2012, ஜூன் 6ம் தேதி, ரோமின் புனித பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த பதினைந்தாயிரத்திற்கும் அதிகமான மக்களிடம் பேசினபோது, போப் பதினாறாம் பெனடிக்ட் இவ்வாறு சொன்னார்: ''ஞாயிறு கர்த்தருடைய நாளும், ஆண்கள்-பெண்களுடைய நாளுமாக இருக்கிறது; அந்நாளில் ஒவ்வொருவரும் வேலைசெய்யாமல் இருக்கவேண்டும்; குடும்பத்திற்காகவும் தேவனுக்காகவும் நேரம் செலவிடவேண்டும்'. இந்த இயக்கம் எங்கே முடியுமென மாபெரும் போராட்டம் புத்தகம் தெளிவாகச் சொல்லுகிறது: 'வேதாகம ஓய்வுநாளைக் கனப்படுத்துகிறவர்கள் சட்ட ஒழுங்கிற்கு எதிரிகள் என்றும், சமுதாய ஒழுக்கக்கட்டுப்பாடுகளை மீறி அராஜகத்தையும் ஊழலையும் ஏற்படுத்தி, பூமியின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை வருவிப்பவர்கள் என்றும் குற்றஞ்சாட்டப்படுவார்கள். அரசாங்கத்தின்மீது பற்றில்லாதவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுவார்கள். தெய்வீகப் பிரமாணம் வலியுறுத்துகிற கடமைகளை மறுக்கிற ஊழியர்கள், அரசாங்க அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவது தேவன் நியமித்த கடமை என்று பேசுவார்கள். கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் சட்டமன்றங்களிலும் நீதிமன்றங்களிலும் தவறாகச் சித்திரிக்கப்பட்டு, கண்டணம் செய்யப்படுவார்கள்'.

---

**இவ்வாறு நிகழுமெறு இப்போது தெரியாமல் இருக்கலாம்; ஆனால் நம் உலகம் எவ்வளவு வேகமாக மாறமுடியும் என்று யோசித்துப்பாருங்கள். கடைசிக்கால நிகழ்வுகள் எவ்வளவு வேகத்தில் சம்பவிக்கலாம் என்பதுபற்றி இன்றைய மாற்றங்கள் என்ன சொல்கின்றன?**

# பூமியிலிருந்து எழும்பின மிருகம்

**வெளி 13 சொல்கிற முதல் மிருகத்திடமிருந்து இந்த மிருகம் எவ்வாறு வேறுபடு கிறது? வெளி 13:11-18.**

---

முதலாவது மிருகம் சமுத்திரத்திலிருந்து எழுந்தது; இரண்டாவது மிருகம் 'பூமியிலிருந்து' எழும்பியது. வெளி 13:11. சமுத்திரம் என்பது 'ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்'. வெளி 17:15. அப்படியானால் பூமி என்பது உலகத்தில் அதிக மக்கள் தொகை இல்லாத பகுதியைக் காட்டுகிறது. முதலாம் மிருகம் ஆதிக்கம் செலுத்திவந்த காலத்தின் முடிவில் இந்த இரண்டாம் மிருகம் எழும்புகிறது. வெளி 13:5. அதாவது சுமார் கி.பி. 1798இல் இது ஆதிக்கத் திற்கு வந்திருக்கவேண்டும்.

இந்த விளக்கம் அமெரிக்காவுக்கு பொருந்துகிறது. கி.பி. 1776 இல் அது சுதந்தர நாடாக அறிவிக்கப்பட்டது; கி.பி. 1776இல் அரசியலமைப்பு ஏற்படுத்தப் பட்டது; 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலக வல்லமையாக அறியப்பட்டது.

'அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதா யிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது' என்று யோவான் சொல்லுகிறார். வெளி 13:11. கொம்புகள் என்பது வேதாகமத்தில் அதிகாரத்தைக் குறிக்கிறது. முதல் மிருகத்தைப் போலல்லாமல், இந்த மிருகத்திற்கு கொம்புகளில் கிரீடம் இல்லை; எனவே இது மன்னராட்சி இல்லையென்பது புரிகிறது. இரண்டு கொம்பு கள் என்பது அமெரிக்காவின் அதிகாரத்திற்கும் வெற்றிக்கும் ஆதாரமாக இருக் கிற இரண்டு முக்கிய ஆட்சி நியதிகளைக் குறிக்கிறது; அது, அரசியல்-மதச் சுதந் தரமாகும்.

**இந்த மிருகத்தில் என்ன மாற்றத்தைக் காணமுடிகிறது, அது எவ்வாறு பேசுகிறது? வெளி 13:11,12.**

ஆட்டுக்குட்டியைப் போன்ற இந்தத் தேசம் இறுதியில் வலுசர்ப்பத்தைப் போல பேசினது. அது, 'முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும்' நடப் பித்து (வெளி 13:12), அதன் மதச்சுதந்தர நியதிகளை ஒழித்து, 'முந்தின மிருகத் தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது'. வெளி 13:12. பூமியி லுள்ள அனைவரும் போப்புமார்க்கத்தின் ஆவிக்குரிய, உலகிய அதிகாரத்தை அங்கீகரிக்கிற வகையில் அந்த முதலாம் மிருகத்தை வணங்கவேண்டுமென அமெரிக்கா கட்டளையிடும். இந்தத் தீர்க்கதரிசனத்தின்படி, மிருகத்திற்கு அமெ ரிக்கா ஒரு சொரூபத்தை உண்டுபண்ணுகிறது; மிருகம் என்பது சபையும் அரசாங் கமும் சேர்ந்த அமைப்பு. மேலும், அந்தச் சொரூபத்தை அனைவரும் வணங்க வேண்டுமெனச் சொல்லுகிறது.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இந்த மிருக வல்லமை யாரென முதலாவது அடையாளம் தெரிந்தபோது, அமெரிக்கா இப்போது இருக்கிற இரா ணுவ-பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை.

---

**அமெரிக்க அரசியலில் இன்றுள்ள நிலையற்ற தன்மைபற்றி யோசியுங்கள். இந்தத் தீர்க்கதரிசனம் ஒருநாளில் நிறைவேற அது எவ்வாறு வழிவகுக்கும்?**

# மேலும் படிக்க:

மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுவது தானி 3ஐ ஞாபகப்படுத்துகிறது; அங்கே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிடம் பொற்சிலையை வணங்குமாறு பாபிலோனின் ராஜா கட்டளையிட்டார். மீறினால் தீயில் எறிந்துவிடுவதாக மிரட்டினார். முற்கால பாபிலோனோ, இன்றைய பாபிலோனோ, பிரச்சினை தொழுகையைப்பற்றியதுதான். மெய்த் தொழுகை தேவ வார்த்தையால் போதிக்கப்பட்ட மனதிலிருந்தும், அவரது அன்பால் மாற்றப்பட்ட ஆத்துமாவிலிருந்தும், அவரது ஆவியால் நிறைந்த இருதயத்திலிருந்தும் வருகிறது. அப்போது நாம் 'இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்', தேவ வார்த்தை சொல்லுகிறபடி அவருடைய சித்தத்திற்கு இசைவாக வாழுவோம். அதுதான் நம்முடைய ஒரே பாதுகாப்பு!

'தேவன் ஒருபோதும் நம் சித்தத்தையோ மனச்சாட்சியையோ கட்டுப்படுத்துவதில்லை; ஆனால், தன்னால் மயக்கி இழுக்க முடியாதவர்களைக் கட்டாயப்படுத்த சாத்தான் தொடர்ந்து எடுக்கிற முயற்சியில் அவன் கொடுமைப்படுத்துகிறான். பயமூட்டியோ கட்டாயப்படுத்தியோ தானே தொழுகையைப் பெற முயலுகிறான். அதை நிறைவேற்றுவதற்காக மத–உலக அதிகாரிகளின் மூலமாகச் செயல்பட்டு, பிரமாணங்களுக்கு எதிரான மனித சட்டங்களை கட்டாயமாக நடைமுறைப்படுத்த அவர்களை ஏவுகிறான்.'

'தங்களுக்கு முன்னுள்ள சோதனையைச் சகித்துக்கொள்ள, தேவவார்த்தையில் வெளிப்படுகிற அவரது சித்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்; அவரது குணம், அரசாங்கம், நோக்கங்கள், அவற்றிற்கு இசைவான செயல்கள் போன்றவைகுறித்த சரியான கருத்து இருந்தால்மட்டுமே அவரைக் கனப்படுத்தமுடியும். வேதாகமச் சத்தியங்களால் சிந்தையைச் செறிவூட்டியிருப்பவர்கள் மட்டுமே மாபெரும் போராட்டத்தின் மத்தியில் நிலைநிற்பார்கள்'.

'சகல கோட்பாடுகளுக்கும் அளவுகோலாகவும், சகல சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையாகவும் வேதாகமத்தை, வேதாகமத்தை மட்டுமே பின்பற்றி நடக்கிற ஒரு கூட்ட மக்கள் தேவனுக்கு இருப்பார்கள். கல்விமான்களின் கருத்துகளும், அறிவியலின் முடிவுகளும், திருச்சபை ஆலோசனை குழுக்களின் கொள்கைகள் அல்லது தீர்மானங்களும் அந்தச் சபைகளைப்போலவே ஏராளமாகவும், முரண்பாடாகவும் உள்ளன; பெரும்பாலானவர்களின் கருத்துகளை ஆவிக்குரிய விசுவாசத்தின் எந்தக் கருத்துக்கும் எதிரான அத்தாட்சியாகக் கருதக் கூடாது. எந்த ஒரு கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்வதற்குமுன், அதற்கு 'என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்பது ஆதரவாக இருக்கிறதா என்று கேட்டுப்பார்க்க வேண்டும்'.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்துவின் வருகை குறித்த எதிர்பார்ப்போடு வாழவும், திகிலூட்டாமல் அந்த நம்பிக் கையைப் பகிர்ந்துகொள்ளவும் என்ன செய்யலாம்?*
2. *தொழுகை குறித்துச் சிந்தியுங்கள். நாம் யாரை அல்லது எதைத் தொழுகிறோம் என் பதுபற்றி நம் அன்றாட வாழ்க்கை என்ன சொல்கின்றது?*
3. *நாமும் மற்றவர்களும் எதிர்காலத்தை பயத்தோடு அல்லாமல் நம்பிக்கையோடு எதிர் கொள்ள எவ்வாறு உதவலாம்?*
4. *கடைசிக்கால நிகழ்வுகளைப் புரிந்துகொள்வது நம் வாழ்க்கையில் நடைமுறை ரீதியாக என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது?*

# பன்றிகறி வேண்டாம், ஓய்வுநாள் வேண்டும்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

தென்கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ள மொசம்பிக் நாட்டில், பன்றி இறைச்சியும், பீரும் விற்பதற்கு தன் அம்மாவுக்கு உதவியாக வேலைசெய்தாள் சாரா; அப்போது செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை பற்றியும் அவளுக்கு ஞாபகம் வந்தது. 'அட்வென்டிஸ்கள் ஏன் சனிக் கிழமைகளில் ஆலயத்திற்குச் செல்லுகிறார்கள்?' என்று யோசித்தாள்.

சிறுவயதில், தன் மூத்த சகோதரனுடன் சேர்ந்து பலமுறை அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்றிருக்கிறாா்; அவர் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவர். பிறகு அவர் வேறொரு நகரத்திற்குச் சென்றுவிட்டார்; இவளும் தன் அம்மா செல்லுகிற சபைக்கே செல்ல ஆரம்பித்தாள். அம்மாவுடன் சேர்ந்து வேலைபார்த்து வந்த சமயத்தில், அட்வென்டிஸ்ட் சபை குறித்த எண்ணங்கள் திரும்பின. அவளுடைய வீட்டிற்கு அருகிலேயே ஒரு அட்வென்டிஸ்ட் குடும்பத்தினர் குடிவந்தார்கள். சனிக்கிழமையில் ஆலயம் செல்வதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டாள்.

அவர்கள் வேதாகமத்தைத் திறந்து, நான்காம் கற்பனையை வாசித்துக்காட்டினார்கள். யாத் 20:8–10. ஏழாம் நாள் ஓய்வுநாளின் பரிசுத்த தன்மை குறித்துச் சொல்லுகிற பிற வசனங் களையும் அவர் வாசித்துக் காட்டினார். இயேசு பூமியில் வாழ்ந்தபோது, ஏழாம் நாள் ஓய்வு நாளை ஆசரித்ததை அறிந்தார். ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கத் தீர்மானித்தாள்.

இனி சனிக்கிழமைகளில் பன்றி கறியோ, பீரோ விற்கப்போவதில்லை என்று சொன் னதும், அம்மாவுக்கு பயங்கர கோபம் வந்தது. அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்ல தடைவிதித் தார். ஆனாலும் சாரா சென்றாள். ஐந்தாம் கற்பனையில் தேவன் சொல்லியிருப்பதுபோல தன் தாயைக் கனம்பண்ண விரும்பினாள். யாத் 20:12. ஆனால் 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிற தைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியம்' என்பதையும் உணர்ந்தாள்.

பிறகு, பன்றிகறி மற்றும் பீரை விற்பனை செய்வதை சாரா முற்றிலுமாக நிறுத்தின போது, பதற்றம் மேலும் அதிகரித்தது. பன்றி கறி போன்ற அசுத்தமான மாம்சத்தைச் சாப் பிடுவதையும், மதுபானம் அருந்துவதையும் தேவன் அனுமதிக்கவில்லை என்று அம்மாவிடம் சொன்னாள். லேவி 11:7; நீதி 20:1; 1கொரி 10:31.

சாராவை வீட்டுவிட்டு அம்மா வெளியேற்றினார். எங்கு செல்வதென்று தெரியாமல், அந்த நகரத்திலிருந்து கிளம்பி, அட்வென்டிஸ்டான தன் சகோதரன், அவரது மனைவி, அவர் களது மகன்களுடன் போய்த் தங்கினாள். வேதனையாக இருந்தது. 'இயேசுவைப் பின்பற்று வதற்கு இதுதான் விலையா?' என்று யோசித்தாள்.

சாராவின் சகோதரர் அவளைப்பற்றி தன் சபையின் தலைவர்களிடம் சொன்னார். அவர்களுடைய முயற்சியினால், அட்வென்டிஸ்ட் போதகர் ஒருவர் சாராவின் அம்மாவைச் சந்தித்துப் பேசினார். அவர் சொன்னதை அம்மா கவனமாகக் கேட்டார். அவர் சொன்னதை எல்லாம் அம்மா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், சாரா வீட்டிற்குத் திரும்ப சம்மதித்தார்.

இன்றும், சாராவின் நம்பிக்கைகளை அம்மா ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், பரிசுத்த ஆவியானவர் அவரது உள்ளத்தைத் தொடவேண்டுமென ஜெபிக்கிறாள். தம் அன்பைப் பற்றி தனக்கு வெளிப்படுத்தின தேவன், தன் அம்மாவுக்கு வெளிப்படுத்த முடியுமென நம்புகிறாள்.